

# நுகர்வோர் விழிப்புணர்வு தகவல் தொகுப்பு











வெளியீடு :

## தமிழ்நாடு அரசு


உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை

எழிலகம், சென்னை - 600 005.

தொலைபேசி : 044-2858 3222, 2858 3422

இணையதளம் : www.consumer.tn.gov.in

மின்அஞ்சல் : consumer@tn.nic.in


## நுகர்வோர் என்பவர் யார்?



பொருட்களையோ அல்லது சேவைகளையோ - விலை கொடுத்தோ, வாக்குறுதி கொடுத்தோ வாங்குபவரை நுகர்வோர் என்கிறோம்.

வணிக மற்றும் வியாபார நோக்குடன் ஒரு பொருளினை அல்லது சேவையினை பணம் செலுத்தி பெறுபவர் நுகர்வோர் ஆகமாட்டார். ஆனால் சிறு வியாபாரத்தை மட்டுமே நம்பி பொருட்கள் வாங்கி விற்று பிழைப்பு நடத்துபவர் நுகர்வோர் ஆகிறார்.

## நுகர்வோர் உரிமைகள் யாவை?

### பாதுகாப்பு உரிமை

உடலுக்கும் உயிருக்கும் ஆபத்து விளைவிக்கக்கூடிய பொருட்கள், உற்பத்தி செய்யும் முறைகள் மற்றும் சேவைகளில் இருந்து பாதுகாத்துக் கொள்ளும் உரிமை.



### தகவல் பெறும் உரிமை

ஏமாற்றும் மற்றும் தவறான தூண்டுதலில் இருந்து தம்மை பாதுகாத்துக் கொள்ள, தானாகவே, அறிவுபூர்வமாக முடிவு எடுக்க உதவும் உரிமை.

### தேர்ந்தெடுக்கும் உரிமை

தனக்குத் தேவையான பொருள் அல்லது சேவைகளை சுதந்திரமாக தேர்ந்தெடுத்துக் கொள்ளும் உரிமை.

### முறையிடும் உரிமை

தன்னுடைய கருத்துக்களையும், குறைகளையும் தக்க இடத்தில் எடுத்துரைக்க, எளிதில் அணுகக்கூடிய உரிமை.

### குறைதீர்க்கும் உரிமை

தரமற்ற பொருட்கள் அல்லது திருப்தியற்ற சேவைகள் காரணமாக ஏற்படும் இழப்புகளுக்கு நியாயமாக நஷ்ட ஈடு பெறுவதற்கான உரிமை.



### நுகர்வோர் கல்விக்கான உரிமை

விழிப்படைந்த நுகர்வோராக இருப்பதற்கு தேவையான அறிவையும், திறமையையும் பெறும் உரிமை.

### தூய்மையான நலம் பயக்கும் சுற்றுச்சூழலுக்கான உரிமை

வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் தூய்மையான நலம் பயக்கும் சுற்றுச் சூழலுக்கான உரிமை.

### அடிப்படை தேவைகளுக்கான உரிமை

உணவு, உடை, இருப்பிடம், உடல்நலப் பாதுகாப்பு, கழிவு நீர் அகற்றுதல் ஆகிய முக்கிய அடிப்படை பொருட்கள் மற்றும் சேவைகள் அனைத்தையும் எளிதில் அணுகக்கூடிய உரிமை.

## நுகர்வோர் கடமைகள் யாவை?



- விழிப்புணர்வோடு இருத்தல்
- ஈடுபாட்டுடன் இருத்தல்
- தேவைக்கு அதிகமான நுகர்வை தவிர்த்தல்
- தவறு செய்யும் உற்பத்தியாளர்கள்-வணிகர்கள் பற்றி புகார் செய்தல்
- பொருட்களையும் சேவைகளையும் முறையாக பயன்படுத்தல்
- சுற்றுச்சூழல் குறித்து பொறுப்புணர்ச்சி
- கூட்டு முயற்சி



- அங்காடிக்குச் செல்வதற்கு முன்பு தேவையை பட்டியலிட வேண்டும்
- பொருட்களின் ரகங்களை ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும்.
- விற்பனையாளர்களின் வற்புறுத்தலை எதிர்க்க வேண்டும்.
- ரசீதுகள், உத்திரவாதங்கள், தகவல் அறிக்கைகள் அனைத்தையும் பத்திரமாக வைத்துக் கொள்ள வேண்டும்,
- பிரச்சனை என்று வந்த உடனேயே அதனை விற்பனையாளரின் கவனத்திற்கு கொண்டு செல்ல வேண்டும்.
- உத்திரவாத அட்டையில் விற்பனையாளரின் முத்திரை மற்றும் கையொப்பத்தைப் பெற வேண்டும்.
- பொருட்களுக்காக வாழாமல், வாழ்க்கைக்குத் தேவையான பொருள் மட்டும் வாங்க வேண்டும்.

## நுகர்வோர் உரிமையை பாதுகாக்க ஏதேனும் சட்டம் உள்ளதா?



ஆம், நுகர்வோர் உரிமைகளை பாதுகாத்துக் கொள்ள நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம், 1986 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது.

மாவட்ட நுகர்வோர் குறைதீர் மன்றம் / மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையத்தின் சிறப்பு அம்சங்கள் யாவை?

- எளிய வழக்காடு முறைகள்
- வழக்கறிஞர் தேவையில்லை
- நாமே வாதிடலாம்
- பதிவு தபாலில் புகாரை அனுப்பலாம்
- பதிவு செய்யப்பட்ட நுகர்வோர் சங்கங்கள் நுகர்வோர்கள் சார்பில் புகார்களை அளித்து வழக்கு தொடுக்கலாம்



- வழக்குகள் பதிவு செய்து வழக்கு நடத்துவதில் குறைந்த செலவு
- நஷ்ட ஈடு பெற சட்டத்தில் வழிவகை

## குறைதீர் மன்றங்கள் அணுகும் முன் செய்ய வேண்டியவை யாவை?

- எதிர் மனுதாரருக்கு புகாரினைப் பற்றிய விவரங்களை விளக்கமாக எழுதி எதிர்பார்க்கும் தீர்வையும் அதில் கூறி, அத்தாட்சிகள் இருப்பின் அவற்றின் நகலையும் அவற்றுடன் இணைத்து, ஒப்புதல் அட்டையுடன் கூடிய பதிவு அஞ்சலில் (RPAD) கடிதம் அனுப்ப வேண்டும்.



- பதிவு அஞ்சல் ரசீதையும், புகாரின் நகலையும் பத்திரமாக பாதுகாக்க வேண்டும்.
- குறிப்பிட்ட கால அவகாசத்திற்குள் பதில் வரவில்லை என்றால் உங்கள் பகுதியில் உள்ள பதிவு செய்யப்பட்ட நுகர்வோர் அமைப்பின் உதவியை நாடலாம்.
- உங்கள் மாவட்ட நுகர்வோர் பாதுகாப்பு குழுவின் தலைவரான மாவட்ட ஆட்சியாளரை புகாருடன் அணுகலாம். மாவட்ட ஆட்சியர் சம்பந்தப்பட்ட துறை அதிகாரி மூலமாகவோ அல்லது நேரடி கடிதம் மூலமாகவோ குறை தீர்க்க நடவடிக்கை எடுப்பார். சென்னையை பொறுத்தளவில் உணவு பொருள் வழங்கல் (ம) நுகர்வோர் பாதுகாப்புத் துறை ஆணையரை அணுகலாம்.
- மேற்கண்ட வழிகளில் நிவர்த்தி கிடைக்கவில்லையெனில் மட்டுமே நுகர்வோர் குறைதீர் மன்றத்தில் வழக்கு தொடர்ந்து நஷ்ட ஈடு கோரலாம்.

## சேவைகளைப் பயன்படுத்தும் போதும் பொருட்களை வாங்கும் போதும் எவ்வாறு எச்சரிக்கையாக இருக்க வேண்டும்?

### பொது விநியோக முறை...

ரேஷன் கடைகளின் மூலம் பொது விநியோக திட்டம் செயல்பட்டு வருகின்றது. இந்த கடைகள் நல்ல தரமான, சரியான எடையுடன் பொருட்களை வழங்கிடுதல் வேண்டும். பொருட்களின் இருப்பு அளவு மற்றும் விலை பற்றிய தகவல்களை பலகையில் அறிவித்தல், பொருட்களின் மாதிரிகளை பார்வைக்கு வைத்தல் வேண்டும். மேற்குறிப்பட்ட தகவல்கள் கொடுக்கப்படவில்லை என்றால் உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் கவனத்திற்கு கொண்டு செல்ல வேண்டும்.

